கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : செல்வி.பவித்ரா. G, எல்.எல்.எம்.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**I.A.No.11/2026 in OS 87/2014**

1.விஜயராணி

2. பூர்ணம்

3. பன்னீர் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. வைத்திலிங்கம்

2. முருகன்

3. ஊராட்சி மன்றத்தலைவர்

சேர்ந்தமங்கலம் பஞ்சாயத்து ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதி விசாரணைக்காக 28.04.2026 அன்று வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பிரகாஷ் பிரிட்டோ அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ராமேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 யின் கீழ், நீதிமன்ற ஆணையரை மறு விசாரணை செய்யும் பொருட்டு அசல் வழக்கை (Re – open) மறுதிறவு செய்து கொள்ள அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>** :–

மனுதாரர்கள் அசல் வழக்கை, வழக்குரை 2வது தபசில் சொத்து உபயவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுநடைபாதை என நிரந்தர ஏவுக்கட்டளை உத்தரவு மற்றும் வலியுறுத்துக்கட்டளை உத்தரவு மற்றும் இதரப் பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்குடன் தாவாச் சொத்துக்களைப் பார்வையிட்டு அளந்து, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் வகையில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக்கோரி வ.வி.எண்.429/2014 என்ற மனுவைத் தாக்கல் செய்திருந்ததில் வழக்கறிஞர் திரு.கனகராஜா அவர்களை நீதிமன்ற ஆணையராக இந்நீதிமன்றம் நியமனம் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும், இந்நீதிமன்ற உத்தரவின்பேரில் நீதிமன்ற ஆணையர் அரசாங்க நில அளவையர் உதவியில்லாமல் தானாகவே எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி தாவா இடங்களைப் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தாவா இடங்களின் இருப்புத்தன்மை மற்றும் அதன் அங்க அடையாளங்களைக் குறித்தும், பார்வையிட்டு அளந்தும், அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யாமல், வழக்குரை 2ம் தபசில் சொத்தையும் அதன் இருப்புத்தன்மையையும் குறிப்பிடாமல் நீதிமன்ற ஆணையரே புதிதாக ஒரு பாதையைக் கண்டுபிடித்து தனது அறிக்கையிலும் மற்றும் வரைபடத்திலும் அம்புகுறியிட்டு காட்டியுள்ளார்

என்றும், இச்செய்கையால், 2014ம் ஆண்டிலிருந்து தற்போது வரை இந்த வழக்கைப் பொறுத்தவரையில் மனுதாரர்கள்/வாதிகள் பொது நடைபாதையை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்து, சுவர் எழுப்பியதால் பொது நடைபாதை இல்லாமல் வாதிகள் மற்றும் பல குடும்பங்கள் தாங்கள் பயன்படுத்தி வந்த பொதுப்பாதை கிடைக்காமலும், அல்லும், பகலும் மிகவும் கஷ்டமான ஜீவனம் செய்து வந்த நிலையில் முழு ஊதியத்தையும் பெற்று கொண்டு உண்மைக்கும் புறம்பான, சம்மந்தமில்லாத போலியான வரைபடம் மற்றும் அறிக்கையை நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ளார் என்றும், அன்னாரின் இச்செய்கையால் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சொல்ல முடியாத இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்றும், இது வன்மையாக கண்டிக்கத்தக்க செயலாகும் என்றும், இந்த வழக்கில் கடந்த 22.09.2023ம் தேதி அன்று Pw2 ஆக அச்சமயம் நியமிக்கப்பட்டிருந்த அரசாங்க நில அளவையரான கற்பகம் என்பவர் நீதிமன்றத்தில் வந்து மேற்படி வழக்கின் 2வது தபசில் சொத்தைப் பொறுத்து சாட்சி மற்றும் Ex.X1 – Ex.X7 அரசாங்க ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில், Ex.X3ல் பூஸ்தி தெரு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், Ex.X4லும் கிராம நில வரைபடத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இந்த நிலையில் உண்மையிலேயும் அரசாங்க ஆவணங்கள் மற்றும் வரைபடத்திலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பொதுப்பாதையை சட்டத்திற்குப் புறம்பாக ஆக்கிரமிப்பு செய்து இருப்பது தெள்ளத்தெளிவாகத் தெரிய வருகிறது என்றும், ஆகையால், மனுத் தபசில் சொத்தை மீண்டும் சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டும், அளந்தும், அங்க அடையாளங்களைக் குறித்தும் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் வகையில் ஏற்கனவே மன்ற ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் அவர்களை மீண்டும் நியமனம் (Re – Issue) செய்தோ அல்லது புதிதாக ஒரு வழக்கறிஞர் அவர்களை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்தோ உத்தரவிடக்கோரி வ.வி.எண்.6/2023 என்ற மனுவை தாக்கல் செய்ததில் இந்நீதிமன்றம் முழுமையான விசாரணைக்கு பின்பு

கடந்த 18.03.2024 தேதியில் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது என்றும், இந்நீதிமன்றம் பிறப்புவித்த உத்தரவின்மீது எங்களது தரப்பில்மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் C.R.P.(MD) No.2466/2024 என்ற சீராய்வு மனுவை தாக்கல் செய்திருந்தோம் என்றும், மேற்படி சீராய்வு மனுவை முழுமையாக விசாரணை செய்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு கடந்த 13.11.2024 தேதியில் மேற்படி சீராய்வு மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. <u>1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வ.வி.எண்.429/2014 மனுவில் ஆணையர் நியமிக்கப்பட்ட போது இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆஜராவதற்கு முன்பே பிறப்பிக்கப்பட்ட உத்தரவாகும் என்றும், மேற்படி உத்தரவின்படி ஆணையரை மனுதாரர்கள் தரப்பில் இந்த எதிர்மனுதாரர்கள் இல்லாமலேயேதான் அழைத்து சென்றுதாவாச் சொத்தை அடையாளம் காட்டி அறிக்கை தாக்கல் செய்யச் செய்துள்ளனர் என்றும், அந்த அறிக்கையானது சரியானது என்பதால்தான் மனுதார்கள் தரப்பிலும், எதிர்மனுதார்கள் தரப்பிலும் ஆரம்பகால கட்டத்தில் அறிக்கை தாக்கல் செய்தவுடன் ஆட்சேபனைகள் எதுவும் தாக்கல் செய்யாமல் ஏற்பு செய்தே இருதரப்பும் வழக்கை மேல்நடத்தி வந்துள்ளனர் என்றும், அதுபோல் ஆரம்ப காலத்தில் மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணைளைத் தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ரத்து செய்ய யாதொரு நடவடிக்கையும் எடுக்காமல், ஆணையர் அறிக்கையை ஏற்றுக்கொண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதுரைக்கு வாய்தா ஏற்படும் வரை இரு தரப்பிலும் ஆணையர் அறிக்கையை சரியென ஒப்புக்கொண்டு வழக்கு நடத்தப்படுகிறது என்றும், நீதிமன்ற ஆணையருக்கு மனுதார்கள் மட்டும் தான் தாவாச் சொத்தைச் சுட்டிக் காட்டியுள்ளனர் என்பதையும், அவர்கள் சுட்டிக்காட்டியதையே ஆணையர் அறிக்கையாக தாக்கல் செய்துள்ளார் என்பதையும், வா.சா.1ன் குறுக்கு

விசாரணை பக்கம் 2ல் "வாதிகளும் கடற்கரை என்பவரும் உடனிருந்து ஆணையருக்கு தாவாச் சொத்துக்களையும் சுற்றுப்புறச் சொத்துக்களையும் அடையாளம் காட்டி விபரம் சொல்லி அதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்" என ஒப்புக் கொண்டுள்ளதன் மூலம் நீதிமன்ற ஆணையர் மனுதாரர்களின் வழிகாட்டுதல் படியே அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் புலனாகும் என்றும், மேற்படி அறிக்கையில் Q1 Q2 Q3 Q4 என அடையாளப்படுத்தப்பட்ட பகுதிதான் மனுதார்கள்/வாதிகளுக்கான பாதை என குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், மேற்கண்ட பாதையால்தான் தனது ஆவணமான வா.சா.ஆ.1ல் பாதையாகக் காட்டப்பட்டுள்ளது என்பதையும் அந்த வா.சா.ஆ.1ல் கண்ட நான்கு மால்களைச் சரிபார்த்து அந்த ஆவணப் படி வாங்கியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என்பதையும் வா.சா.1 ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை பக்கம் 3ல் வா.சா.ஆ.1ல் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்ட தனக்குப் பாத்தியப்பட்ட 1ம் அயிட்ட மனைக்கும் தெற்கு, அய்யப்பன் வீட்டிற்கும் கிழக்கு, செல்லச்சாமி நாடார் (1, 2 பிரதிவாதிகள்) மனைக்கும் மேற்கு, சுப்பிரமணிய நாடார் வீட்டிற்கும் வடக்கு என்று காட்டப்பட்டுள்ள நான்குமால்கள் பகுதியைத்தான் ஆணையர் தனது வரைபடத்தில் Q2 Q3 எனக் காட்டியுள்ளார் என்றும், வா.சா.ஆ.1ல் காட்டப்பட்டுள்ள 3ம் தபசில் விவரிக்கப்பட்ட மால்கள் தென்வடல் தெருவிற்கும் மேற்கு, அய்யப்பன் வீட்டிற்கும் கிழக்கு, ஐயம்பெருமாள் வீட்டிற்கும் வடக்கு, அய்யப்பன் வீட்டிற்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ள பகுதி ஆணையர் வரைபடத்தில் Q1 Q2 என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதி என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1ல் கிழக்கு மால்கள் இரண்டு தடவை குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் ஒர் மால் விடுபட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1ல் கூறப்பட்ட சொத்து விபரப்படி தனக்குப் பாதை என்றால் சரிதான்" என்று ஆணையர் குறிப்பிட்ட Q1 Q2 Q3 Q4 பகுதியை தனது நடைபாதை என வாதி

ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அதுபோல் கு.வி.பக்கம் 4ல் வா.சா.ஆ.2ல் 5ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திற்கு மால் கடற்கரை பாக வீட்டிற்கும் கிழக்கு, கிழமேல் நடைபாதைக்கும் தெற்கும், நடைபாதைக்கும் மேற்கும், இராமையா நாடார் வீட்டிற்கும் வடக்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றும் அதில் கிழமேல் நடைபாதைக்குத் தெற்கு எனக் காட்டப்பட்டுள்ள பகுதி ஆணையர் அறிக்கையில் Q1Q2 பகுதியை குறிக்கும் என்றால் சரிதான் என்றும், நடைபாதைக்கும் மேற்கு என காட்டப்பட்டுள்ள பகுதி ஆணையர் அறிக்கையில் Q2Q3 பகுதியை குறிக்கும் என்றால் சரிதான் என்று வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்கண்ட வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் படி ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட Q1Q2Q3 பகுதி மட்டுமே வாதியின் புழக்க நடைபாதை என்பதை ஒப்புக்கொண்டுவிட்டு அதற்கு மாறாகக் கட்சி செய்யவும், பிராது 2ம் தபசில் சொத்தை பாதை என உரிமை கோரவும் வாதிகளுக்கு உரிமையில்லை என்றும், இதை வாதியும் தனது குறுக்கு விசாரணை பக்கம் 5ல் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், வா.சா.1ல் 1ம் அயிட்ட வீட்டிற்கு மாலாக வெள்ளையன் நாடார் மனைக்கு மேற்கு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1ல் தனது சொத்திற்குக் கீழ்புறமாக 2, 3 பிரதிவாதிகள் இடத்தின் வழியாக பாதை இருப்பதாக நான்கு மால்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் என்று ஒப்புக் கொண்டுள்ளதன் மூலம் வாதியின் ஆவணத்திலேயே 2ம் தபசில் சொத்து பாதை என விவரிக்கப்படவில்லை என்றும், 2ம் தபசில் சொத்தை மீண்டும் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யக் கோருவதற்கு வாதிகளுக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றும், வா.சா.1 குறுக்கு விசாரணை பக்கம் 6ல் 2ம் தபசில் சொத்தாக தனது பிராதில் காட்டப்பட்டுள்ள சொத்து நான்குமால்கள் படி பூமியில் யாதொரு அமைப்பு எதுவும் அடையாளம் காண முடியாது என்பதையும், அதில் உள்ள நான்குமால்கள் தவறானவை என்பதையும் வாதியே சமூகநீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அதனால்தான் 2ம் தபசில்

சொத்து ஆணையரால் பூமியில் அடையாளப்படுத்தப்படவில்லை என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், எனவே அதற்கு மாறாக தற்போது ஆணையர் அறிக்கையை குறைகூறுவதற்கு மனுதார்களுக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றும், மனுதார்கள் தாங்கள் ஒப்புக்கொண்ட சங்கதிகளுக்கு மாறாக பின்யோசனை செய்து தற்போது ஆணையர் அறிக்கையில் கண்ட சங்கதிகள் பொய்யென மறுப்பதற்கு முரண்தடை எனும் தோசத்தால் தடைசெய்யப்படுகிறார்கள் என்றும், எனவே வாதிகள் கூற்றுபடியே பூமியில் அடையாளம் காண இயலவில்லை என ஆணையரால் முடிவு செய்யப்பட்ட விபரத்தை ஒப்புக்கொண்டுவிட்டு மீண்டும் ஆய்வு செய்யப்பட வேண்டுமென்பதற்கு ஆணையர் நியமனம் கோருவதும், ஆணையரின் நடவடிக்கையைக் குறைகூறுவதும் தவறானவையாகும் என்றும், மனுதார்களின் மனு கீழ்கண்ட காரணிகளால் இவ்வழக்கில் நிலைநிற்கதக்கதல்ல என்றும், 1. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ,.2 ல் கண்ட பாதையின் படி, நான்குமால்கள் படி, பூமியில் பாதை வாதிக்குப் புழக்கத்தில் இருக்கிறது என்பது வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும், ஆதலால் ஒப்புக்கொள்ளப்பட்ட பாதையே வாதிகள் வழிகாட்டுதல்படி தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையில் Q1Q2Q3Q4 பகுதி பாதை என நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் அது குறித்து மீண்டும் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும், மேலும் தற்போது ஒப்புக்கொண்ட சங்கதிளுக்கு மாறாக மனுதாரர்/வாதி ஆணையர் அறிக்கை தவறு என கட்சி செய்ய முரண்தடை எனும் தோசத்தினால் தடை செய்யப்பட்டும் உள்ளார் என்றும், மேலும் வ.வி.எண்.6/2023 மனுவில் பிறந்த உத்தரவு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் CrP(MD) No.2466/2024 ல் பிறப்பித்த உத்தரவில் இந்நீதிமன்றம் வ.வி.எண்.6/2023 ல் பிறப்பித்த உத்தரவு சரியானது என உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அதன்மீது மேல்முறையீடு செய்யாமல் இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனுதாரர்/வாதிக்கு அருகதையில்லை என்றும்,

2. 2ம் தபசில் சொத்தை பூமியில் அடையாளம் காண இயலாது என்பதை மனுதாரர்/வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதால் இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், ஆணையர் அறிக்கைக்கு இந்த நடைபாதை குறித்து சரியான முகாந்திரத்துடன் வாதிகள் மறுப்பு தெரிவிக்காமலும் அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட பின்பு வழக்கு விசாரணை காலம் முடிந்தபின்பு அறிக்கை தவறு என எடுத்துரைப்பதற்கு முரண்தடை எனும் தோசத்தினால் தடை செய்யப்படுகிறார்கள் என்றும், மேலும் CRP(MD) No.2466/2024 ல் உத்தரவு பாரா 9ல் இந்த மனுதாரர்/வாதி ஆட்சேபனையோ அல்லது அந்த அறிக்கையின் மீது வாதிக்கு திருப்தி இல்லையெனில் அதை ரத்து செய்யவோ மட்டுமே அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், ஆனால் மேற்கண்டவாறு ஆட்சேபனையோ அல்லது அறிக்கையை ரத்து செய்யவோ மனு செய்து அனுமதிக்கும் பட்சம் புதிதாக ஆணையர் நியமனம் செய்ய மனு செய்யலாம் என யாதொரு உத்தரவும் உயர்நீதிமன்றம் வழிகாட்டுதலாக வழங்கவில்லை என்றும், மேற்கண்டவாறு ஆட்சேபனை தாக்கல் செய்தால் அதை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மட்டுமே தெரிவித்துள்ளது என்றும், அதன்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையின் அடிப்படையில் இவ்வழக்கில் அறிக்கையை இறுதி விசாரணையை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பொருளாகும் என்றும், ஆனால் அதற்கு மாறாக ஆட்சேபனையும் தாக்கல் செய்து தற்போது அறிக்கையை ரத்து செய்ய நீதிமன்ற ஆணையரை விசாரிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளது உயர்நீதிமன்றம் காட்டிய வழிகாட்டுதல் உத்தரவிற்கு எதிரானதாகும் என்றும், வ.வி.எண்.429/2014ல் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கையைச் செல்லாது என முடிவு செய்ய உயர்நீதிமன்றம் யாதொரு உத்தரவும் பிறப்பிக்காததால் மனுவின் படி மீண்டும் ஆணையர் நியமிக்க கோர இயலாது என்றும், அதுபோல் இம்மனுவில் நீதிமன்ற ஆணையர் எதிர்மனுதாரராக

சேர்க்கப்படவில்லை என்றும், இம்மனுவில் மனுதாரர்களால் Exparty யாக அழைத்து சென்று மனுதாரர்களால் தாவா சொத்து அடையாளப்படுத்தப்பட்டு மனுதாரர்களால் ஏற்புசெய்து கொண்ட நீதிமன்ற அறிக்கையை தற்போது காலபிற்பாடாக சாட்சிய விசாரணை காலமெல்லாம் முடிந்த பின் தற்போது நீதிமன்ற ஆணையரைக் குறைகூறிதாக்கல் செய்துள்ளதில் நீதிமன்ற ஆணையர் இம்மனுவில் தரப்பினராக இல்லாமல் முடிவு செய்ய இயலாது என்றும், இந்த வழக்கானது இருதரப்பு சாட்சியங்கள் முடிந்து பல்வேறு வாய்தாக்கள் பல மாதங்களாக ஏற்பட்டும் அதற்கு முன்பு 09.02.2020 லேயே சாட்சிய விசாரணை தொடங்கப்பட்டு நாளது தேதிவரை வழக்கு நடந்து வரும் சூழலில் வாதுரைக்காக போட்ட காலத்தில் தான் ஒப்புக்கொண்ட சங்கதிகளுக்கு மாறாக மீண்டும் ஆணையரை நியமிக்கும் வகைக்கு நீதிமன்ற ஆணையரை விசாரிக்க வேண்டுமெனக் கோருவது வழக்கு காலத்தை நீட்டிக்க வேண்டுமென்ற உள்நோக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு என்பது துலங்கும் என்றும், இவ்வழக்கில் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாதி ஒவ்வொரு வழக்கறிஞரை நியமிப்பதும் பின் வழக்கறிஞரை அணுகாமல் இருந்து கொண்டு வழக்கில் போதிய தகுதியான முகாந்திரம் இல்லையென்பதால் வழக்கை நடத்தாமல் விடுவதும் நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர் தோன்றாத காரணத்தினால் நீதிமன்றம் தானாக அழைப்பாணை அனுப்புவதும் அதை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் காலம் கடத்துவதும் பின்னிட்டு ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு மனுச் செய்வதும் புதிதாக சாட்சியங்கள் கிடைத்துள்ளதாகக் கூறி வழக்கை ரீ ஒபன் செய்வதுமான நடவடிக்கைகளை இந்த வாதிகள் தொடர்ந்து செய்து வழக்கின் காலத்தை வாதிகளே நீட்டிப்பு செய்து வருகிறார்கள் என்பதாலும் வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளுக்கு மாறாக பரிகாரங்கள் கோருவதற்கும் முரண்தடை எனும் தோசத்தால் தடை செய்யப்படுகிறார்கள் என்றும், மனுதார்கள் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ரத்து செய்யவும் புதிதாக நியமனம்

செய்யவும் கோரியுள்ள மனுவில் ஆணையர் கட்சி சேர்க்கப்படவில்லை என்றும், ஆணையருக்கு இந்த மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனைகளைத் தெரிவித்து அவரிடமிருந்து பதில் எதுவும் பெறவில்லை என்றும், ஆட்சேபனை மனுவில் ஆணையரைக் குறைகூறி குற்றச்சாட்டுகள் கூறியுள்ள நிலையில் இம்மனுவில் அவரை கட்சி சேர்க்காமலும் அவரின் ஆட்சேபனையைக் கேட்காமலும் தீர்வு முடிவு எட்ட மனுதாரர் மனு செய்துள்ளது சட்டப்பிழையானது என்றும், வ.வி.எண்.429/2024 ல் பிறந்த உத்தரவு படி மனுதாரே ஆணையரை இந்த எதிர்மனுதாரர்கள் இல்லாமல் தாவாச் சொத்தை சுட்டிக்காட்டி அறிக்கை பெற்றுள்ளார் என்றும், அந்த அறிக்கை சரியானது என ஒப்புக்கொண்டு குறுக்கு விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக ஆணையரைத் தற்போது குறைகூறி மனு செய்துள்ளது விந்தையானது என்றும், ஆணையர் நியமனம் செய்யும் போதே வாதியின் வழக்கை நிரூபணம் செய்வதற்கு நில அளவையர் தேவை என்பது தெரிந்தே பரிகாரம் கோராமல் தற்போது ஆணையர் அளவையருடன் அளவை செய்யவில்லை, அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனப் புகார் தெரிவிப்பது சட்டவிரோதமானதாகும் என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தங்களின் கட்சியை ஆணங்களின் அடிப்படையிலேயே நிரூபித்துப்போக கடமைப்பட்டவர்கள் என்றும், தங்களின் ஆவணங்களிலேயே நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டபடியான Q வரிசையில் அடையாளப்படுத்தப்பட்ட இடம் மட்டும்தான் மனுதார்களின் பாதை என்பதை ஒப்புக்கொண்டு வா.சா.ஆ.1 2 ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்று விட்டு பிரதிவாதிகளின் இடத்தினை ஆவணமின்றி உரிமைகோருவதற்குத் தகுதியில்லை என்றும், மேலும் வாதிகள் தங்களுடைய ஆவணத்திற்கு மாறாக பூமியில் அங்க அடையாளங்களைத் தேடுவதற்கும் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வதற்கும் கோருவதற்கு சட்டப்படி இயலாது என்றும், வாதிகள் தங்களின் வழக்கின் சாட்சியங்களை தங்களின் ஆவணத்திற்கு மாறாகக் கண்டுபிடிப்பதற்கு ஆணையர் நியமனம் செய்ய கோர இயலாது என்றும், மனுதார்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வருவாய்

நில அளவையர் சாட்சியம் படியும் பொதுப்பாதை என்பது ஏதும் பூமியில் இல்லை என்பதும் நில அளவை எண்கள் தவறானவை என்பதும் தெளிவுப்படுத்தப்பட்ட நிலையில் அதற்கு மாறாக இந்தநிர் மனு நீதிமன்ற ஆணையரை விசாரிக்க தாக்கல் செய்துள்ளதைத் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி இம்மனு அனுமதிக்கக்கூடியதா என்பதேயாகும்.

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. தீர்வு</u> :–

6.1. மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அசல் வழக்கில் வாதிகள் தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கில் 26.02.2018 அன்று வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையரை விசாரணை செய்ய அனுமதி கோரி வ.வி.எண்.12/2026 மனுவும் அதனை தொடர்ந்து அசல் வழக்கை மறுதிறவு செய்ய வேண்டி இம்மனுவை மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது.

6.2 மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் அசல் வழக்கை, வழக்குரை 2 வது தபசில் சொத்து உபயவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுநடைபாதை என நிரந்தர ஏவுக்கட்டளை உத்தரவு மற்றும் வலியுறுத்துக்கட்டளை உத்தரவு மற்றும் இதரப்

பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்குடன் தாவாச் சொத்துக்களைப் பார்வையிட்டு அளந்து, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் வகையில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக்கோரி வ.வி.எண்.429/2014 என்ற மனுவைத் தாக்கல் செய்திருந்ததில் வழக்கறிஞர் திரு.கனகராஜா அவர்களை நீதிமன்ற ஆணையராக இந்நீதிமன்றம் நியமனம் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும், இந்நீதிமன்ற உத்தரவின்பேரில் நீதிமன்ற ஆணையர் அரசாங்க நில அளவையர் உதவியில்லாமல் தானாகவே எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி தாவா இடங்களைப் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தாவா இடங்களின் இருப்புத்தன்மை மற்றும் அதன் அங்க அடையாளங்களைக் குறித்தும், பார்வையிட்டு அளந்தும், அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யாமல், வழக்குரை 2 ம் தபசில் சொத்தையும் அதன் இருப்புத்தன்மையையும் குறிப்பிடாமல் நீதிமன்ற ஆணையரே புதிதாக ஒரு பாதையைக் கண்டுபிடித்து தனது அறிக்கையிலும் மற்றும் வரைபடத்திலும் அம்புகுறியிட்டு காட்டியுள்ளார் என்றும், இச்செய்கையால், 2014 ம் ஆண்டிலிருந்து தற்போது வரை இந்த வழக்கைப் பொறுத்தவரையில் மனுதாரர்கள்/வாதிகள் பொது நடைபாதையை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்து, சுவர் எழுப்பியதால் பொது நடைபாதை இல்லாமல் வாதிகள் மற்றும் பல குடும்பங்கள் தாங்கள் பயன்படுத்தி வந்த பொதுப்பாதை கிடைக்காமலும், அல்லும், பகலும் மிகவும் கஷ்டமான ஜீவனம் செய்து வந்த நிலையில் முழு ஊதியத்தையும் பெற்று கொண்டு உண்மைக்கும் புறம்பான, சம்மந்தமில்லாத போலியான வரைபடம் மற்றும் அறிக்கையை நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ளார் என்றும், அன்னாரின் இச்செய்கையால் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சொல்ல முடியாத இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்றும், இது வன்மையாக கண்டிக்கத்தக்க செயலாகும் என்றும், இந்த வழக்கில் கடந்த 22.09.2023 ம் தேதி அன்று Pw2 ஆக அச்சமயம்

நியமிக்கப்பட்டிருந்த அரசாங்க நில அளவையரான கற்பகம் என்பவர் நீதிமன்றத்தில் வந்து மேற்படி வழக்கின் 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து சாட்சி மற்றும் Ex.X1 – Ex.X7 அரசாங்க ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில், Ex.X3 ல் பூஸ்தி தெரு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், Ex.X4 லும் கிராம நில வரைபடத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இந்த நிலையில் உண்மையிலேயும் அரசாங்க ஆவணங்கள் மற்றும் வரைபடத்திலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பொதுப்பாதையை சட்டத்திற்குப் புறம்பாக ஆக்கிரமிப்பு செய்து இருப்பது தெள்ளத்தெளிவாகத் தெரிய வருகிறது என்றும், ஆகையால், மனுத் தபசில் சொத்தை மீண்டும் சர்வேயர் உதவியுடள் பார்வையிட்டும், அளந்தும், அங்க அடையாளங்களைக் குறித்தும் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் வகையில் ஏற்கனவே மன்ற ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் அவர்களை மீண்டும் நியமனம் (Re – Issue) செய்தோ அல்லது புதிதாக ஒரு வழக்கறிஞர் அவர்களை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்தோ உத்தரவிடக்கோரி வ.வி.எண்.6/2023 என்ற மனுவை தாக்கல் செய்ததில் இந்நீதிமன்றம் முழுமையான விசாரணைக்கு பின்பு கடந்த 18.03.2024 தேதியில் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது என்றும், இந்நீதிமன்றம் பிறப்புவித்த உத்தரவின்மீது எங்களது தரப்பில்மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் C.R.P.(MD) No.2466/2024 என்ற சீராய்வு மனுவை தாக்கல் செய்திருந்தோம் என்றும், மேற்படி சீராய்வு மனுவை முழுமையாக விசாரணை செய்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு கடந்த 13.11.2024 தேதியில் மேற்படி சீராய்வு மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.3. 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வ.வி.எண்.429/2014 மனுவில் ஆணையர் நியமிக்கப்பட்ட போது இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆஜராவதற்கு முன்பே பிறப்பிக்கப்பட்ட உத்தரவாகும் என்றும், மேற்படி உத்தரவின்படி

ஆணையரை மனுதாரர்கள் தரப்பில் இந்த எதிர்மனுதாரர்கள் இல்லாமலேயேதான் அழைத்து சென்றுதாவாச் சொத்தை அடையாளம் காட்டி அறிக்கை தாக்கல் செய்யச் செய்துள்ளனர் என்றும், அந்த அறிக்கையானது சரியானது என்பதால்தான் மனுதார்கள் தரப்பிலும், எதிர்மனுதார்கள் தரப்பிலும் ஆரம்பகால கட்டத்தில் அறிக்கை தாக்கல் செய்தவுடன் ஆட்சேபனைகள் எதுவும் தாக்கல் செய்யாமல் ஏற்பு செய்தே இருதரப்பும் வழக்கை மேல்நடத்தி வந்துள்ளனர் என்றும், அதுபோல் ஆரம்ப காலத்தில் மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணைளைத் தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ரத்து செய்ய யாதொரு நடவடிக்கையும் எடுக்காமல், ஆணையர் அறிக்கையை ஏற்றுக்கொண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதுரைக்கு வாய்தா ஏற்படும் வரை இரு தரப்பிலும் ஆணையர் அறிக்கையை சரியென ஒப்புக்கொண்டு வழக்கு நடத்தப்படுகிறது என்றும், நீதிமன்ற ஆணையருக்கு மனுதார்கள் மட்டும் தான் தாவாச் சொத்தைச் சுட்டிக் காட்டியுள்ளனர் என்பதையும், அவர்கள் சுட்டிக்காட்டியதையே ஆணையர் அறிக்கையாக தாக்கல் செய்துள்ளார் என்பதையும், வா.சா.1ன் குறுக்கு விசாரணை பக்கம் 2ல் "வாதிகளும் கடற்கரை என்பவரும் உடனிருந்து ஆணையருக்கு தாவாச் சொத்துக்களையும் சுற்றுப்புறச் சொத்துக்களையும் அடையாளம் காட்டி விபரம் சொல்லி அதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்" என ஒப்புக் கொண்டுள்ளதன் மூலம் நீதிமன்ற ஆணையர் மனுதார்களின் வழிகாட்டுதல் படியே அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் புலனாகும் என்றும், மேற்படி அறிக்கையில் Q1 Q2 Q3 Q4 என அடையாளப்படுத்தப்பட்ட பகுதிதான் மனுதார்கள்/வாதிகளுக்கான பாதை என குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், மேற்கண்ட பாதையால்தான் தனது ஆவணமான வா.சா.ஆ.1ல் பாதையாகக் காட்டப்பட்டுள்ளது என்பதையும் அந்த வா.சா.ஆ.1ல் கண்ட நான்கு மால்களைச் சரிபார்த்து அந்த ஆவணப் படி வாங்கியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என்பதையும் வா.சா.1 ஒப்புக் கொண்டுள்ளார் என்றும்,

வா.சா.1 தனது குறுக்கு விசாரணை பக்கம் 3ல் வா.சா.ஆ.1ல் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்ட தனக்குப் பாத்தியப்பட்ட 1ம் அயிட்ட மனைக்கும் தெற்கு, அய்யப்பன் வீட்டிற்கும் கிழக்கு, செல்லச்சாமி நாடார் (1, 2 பிரதிவாதிகள்) மனைக்கும் மேற்கு, சுப்பிரமணிய நாடார் வீட்டிற்கும் வடக்கு என்று காட்டப்பட்டுள்ள நான்குமால்கள் பகுதியைத்தான் ஆணையர் தனது வரைபடத்தில் Q2 Q3 எனக் காட்டியுள்ளார் என்றும், வா.சா.ஆ.1ல் காட்டப்பட்டுள்ள 3ம் தபசில் விவரிக்கப்பட்ட மால்கள் தென்வடல் தெருவிற்கும் மேற்கு, அய்யப்பன் வீட்டிற்கும் கிழக்கு, ஐயம்பெருமாள் வீட்டிற்கும் வடக்கு, அய்யப்பன் வீட்டிற்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ள பகுதி ஆணையர் வரைபடத்தில் Q1 Q2 என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதி என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1ல் கிழக்கு மால்கள் இரண்டு தடவை குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் ஒர் மால் விடுபட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1ல் கூறப்பட்ட சொத்து விபரப்படி தனக்குப் பாதை என்றால் சரிதான்" என்று ஆணையர் குறிப்பிட்ட Q1 Q2 Q3 Q4 பகுதியை தனது நடைபாதை என வாதி ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அதுபோல் கு.வி.பக்கம் 4ல் வா.சா.ஆ.2ல் 5ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திற்கு மால் கடற்கரை பாக வீட்டிற்கும் கிழக்கு, கிழமேல் நடைபாதைக்கும் தெற்கும், நடைபாதைக்கும் மேற்கும், இராமையா நாடார் வீட்டிற்கும் வடக்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றும் அதில் கிழமேல் நடைபாதைக்குத் தெற்கு எனக் காட்டப்பட்டுள்ள பகுதி ஆணையர் அறிக்கையில் Q1Q2 பகுதியை குறிக்கும் என்றால் சரிதான் என்றும், நடைபாதைக்கும் மேற்கு என காட்டப்பட்டுள்ள பகுதி ஆணையர் அறிக்கையில் Q2Q3 பகுதியை குறிக்கும் என்றால் சரிதான் என்று வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்கண்ட வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் படி ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட Q1Q2Q3 பகுதி மட்டுமே வாதியின் புழக்க நடைபாதை என்பதை ஒப்புக்கொண்டுவிட்டு அதற்கு மாறாகக் கட்சி செய்யவும், பிராது 2ம் தபசில் சொத்தை பாதை என உரிமை

கோரவும் வாதிகளுக்கு உரிமையில்லை என்றும், இதை வாதியும் தனது குறுக்கு விசாரணை பக்கம் 5ல் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், வா.சா.1ல் 1ம் அயிட்ட வீட்டிற்கு மாலாக வெள்ளையன் நாடார் மனைக்கு மேற்கு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1ல் தனது சொத்திற்குக் கீழ்புறமாக 2, 3 பிரதிவாதிகள் இடத்தின் வழியாக பாதை இருப்பதாக நான்கு மால்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் என்று ஒப்புக் கொண்டுள்ளதன் மூலம் வாதியின் ஆவணத்திலேயே 2ம் தபசில் சொத்து பாதை என விவரிக்கப்படவில்லை என்றும், 2ம் தபசில் சொத்தை மீண்டும் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யக் கோருவதற்கு வாதிகளுக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றும், வா.சா.1 குறுக்கு விசாரணை பக்கம் 6ல் 2ம் தபசில் சொத்தாக தனது பிராதில் காட்டப்பட்டுள்ள சொத்து நான்குமால்கள் படி பூமியில் யாதொரு அமைப்பு எதுவும் அடையாளம் காண முடியாது என்பதையும், அதில் உள்ள நான்குமால்கள் தவறானவை என்பதையும் வாதியே சமூகநீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அதனால்தான் 2ம் தபசில் சொத்து ஆணையரால் பூமியில் அடையாளப்படுத்தப்படவில்லை என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், எனவே அதற்கு மாறாக தற்போது ஆணையர் அறிக்கையை குறைகூறுவதற்கு மனுதார்களுக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றும், மனுதார்கள் தாங்கள் ஒப்புக்கொண்ட சங்கதிகளுக்கு மாறாக பின்யோசனை செய்து தற்போது ஆணையர் அறிக்கையில் கண்ட சங்கதிகள் பொய்யென மறுப்பதற்கு முரண்தடை எனும் தோசத்தால் தடைசெய்யப்படுகிறார்கள் என்றும், எனவே வாதிகள் கூற்றுபடியே பூமியில் அடையாளம் காண இயலவில்லை என ஆணையரால் முடிவு செய்யப்பட்ட விபரத்தை ஒப்புக்கொண்டுவிட்டு மீண்டும் ஆய்வு செய்யப்பட வேண்டுமென்பதற்கு ஆணையர் நியமனம் கோருவதும், ஆணையரின் நடவடிக்கையைக் குறைகூறுவதும் தவறானவையாகும் என்றும், மனுதார்களின் மனு கீழ்கண்ட காரணிகளால் இவ்வழக்கில் நிலைநிற்கதக்கதல்ல என்றும்,

1. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ,.2 ல் கண்ட பாதையின் படி, நான்குமால்கள் படி, பூமியில் பாதை வாதிக்குப் புழக்கத்தில் இருக்கிறது என்பது வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும், ஆதலால் ஒப்புக்கொள்ளப்பட்ட பாதையே வாதிகள் வழிகாட்டுதல்படி தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையில் Q1Q2Q3Q4 பகுதி பாதை என நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் அது குறித்து மீண்டும் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும், மேலும் தற்போது ஒப்புக்கொண்ட சங்கதிளுக்கு மாறாக மனுதாரர்/வாதி ஆணையர் அறிக்கை தவறு என கட்சி செய்ய முரண்தடை எனும் தோசத்தினால் தடை செய்யப்பட்டும் உள்ளார் என்றும், மேலும் வ.வி.எண்.6/2023 மனுவில் பிறந்த உத்தரவு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் CrP(MD) No.2466/2024 ல் பிறப்பித்த உத்தரவில் இந்நீதிமன்றம் வ.வி.எண்.6/2023 ல் பிறப்பித்த உத்தரவு சரியானது என உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அதன்மீது மேல்முறையீடு செய்யாமல் இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனுதாரர்/வாதிக்கு அருகதையில்லை என்றும்,

2. 2ம் தபசில் சொத்தை பூமியில் அடையாளம் காண இயலாது என்பதை மனுதாரர்/வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதால் இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், ஆணையர் அறிக்கைக்கு இந்த நடைபாதை குறித்து சரியான முகாந்திரத்துடன் வாதிகள் மறுப்பு தெரிவிக்காமலும் அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட பின்பு வழக்கு விசாரணை காலம் முடிந்தபின்பு அறிக்கை தவறு என எடுத்துரைப்பதற்கு முரண்தடை எனும் தோசத்தினால் தடை செய்யப்படுகிறார்கள் என்றும், மேலும் CRP(MD) No.2466/2024 ல் உத்தரவு பாரா 9ல் இந்த மனுதாரர்/வாதி ஆட்சேபனையோ அல்லது அந்த அறிக்கையின் மீது வாதிக்கு திருப்தி இல்லையெனில் அதை ரத்து செய்யவோ மட்டுமே அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், ஆனால் மேற்கண்டவாறு ஆட்சேபனையோ அல்லது அறிக்கையை ரத்து செய்யவோ மனு செய்து அனுமதிக்கும் பட்சம் புதிதாக ஆணையர் நியமனம்

செய்ய மனு செய்யலாம் என யாதொரு உத்தரவும் உயர்நீதிமன்றம் வழிகாட்டுதலாக வழங்கவில்லை என்றும், மேற்கண்டவாறு ஆட்சேபனை தாக்கல் செய்தால் அதை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மட்டுமே தெரிவித்துள்ளது என்றும், அதன்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையின் அடிப்படையில் இவ்வழக்கில் அறிக்கையை இறுதி விசாரணையை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பொருளாகும் என்றும், ஆனால் அதற்கு மாறாக ஆட்சேபனையும் தாக்கல் செய்து தற்போது அறிக்கையை ரத்து செய்ய நீதிமன்ற ஆணையரை விசாரிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளது உயர்நீதிமன்றம் காட்டிய வழிகாட்டுதல் உத்தரவிற்கு எதிரானதாகும் என்றும், வ.வி.எண்.429/2014 ல் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கையைச் செல்லாது என முடிவு செய்ய உயர்நீதிமன்றம் யாதொரு உத்தரவும் பிறப்பிக்காததால் மனுவின் படி மீண்டும் ஆணையர் நியமிக்க கோர இயலாது என்றும், அதுபோல் இம்மனுவில் நீதிமன்ற ஆணையர் எதிர்மனுதாரராக சேர்க்கப்படவில்லை என்றும், இம்மனுவில் மனுதாரர்களால் Exparty யாக அழைத்து சென்று மனுதாரர்களால் தாவா சொத்து அடையாளப்படுத்தப்பட்டு மனுதாரர்களால் ஏற்புசெய்து கொண்ட நீதிமன்ற அறிக்கையை தற்போது காலபிற்பாடாக சாட்சிய விசாரணை காலமெல்லாம் முடிந்த பின் தற்போது நீதிமன்ற ஆணையரைக் குறைகூறிதாக்கல் செய்துள்ளதில் நீதிமன்ற ஆணையர் இம்மனுவில் தரப்பினராக இல்லாமல் முடிவு செய்ய இயலாது என்றும், இந்த வழக்கானது இருதரப்பு சாட்சியங்கள் முடிந்து பல்வேறு வாய்தாக்கள் பல மாதங்களாக ஏற்பட்டும் அதற்கு முன்பு 09.02.2020 லேயே சாட்சிய விசாரணை தொடங்கப்பட்டு நாளது தேதிவரை வழக்கு நடந்து வரும் சூழலில் வாதுரைக்காக போட்ட காலத்தில் தான் ஒப்புக்கொண்ட சங்கதிகளுக்கு மாறாக மீண்டும் ஆணையரை நியமிக்கும் வகைக்கு நீதிமன்ற ஆணையரை விசாரிக்க வேண்டுமெனக் கோருவது வழக்கு காலத்தை நீட்டிக்க

வேண்டுமென்ற உள்நோக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு என்பது துலங்கும் என்றும், இவ்வழக்கில் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாதி ஒவ்வொரு வழக்கறிஞரை நியமிப்பதும் பின் வழக்கறிஞரை அணுகாமல் இருந்து கொண்டு வழக்கில் போதிய தகுதியான முகாந்திரம் இல்லையென்பதால் வழக்கை நடத்தாமல் விடுவதும் நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர் தோன்றாத காரணத்தினால் நீதிமன்றம் தானாக அழைப்பாணை அனுப்புவதும் அதை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் காலம் கடத்துவதும் பின்னிட்டு ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு மனுச் செய்வதும் புதிதாக சாட்சியங்கள் கிடைத்துள்ளதாகக் கூறி வழக்கை ரீ ஒபன் செய்வதுமான நடவடிக்கைகளை இந்த வாதிகள் தொடர்ந்து செய்து வழக்கின் காலத்தை வாதிகளே நீட்டிப்பு செய்து வருகிறார்கள் என்பதாலும் வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளுக்கு மாறாக பரிகாரங்கள் கோருவதற்கும் முரண்தடை எனும் தோசத்தால் தடை செய்யப்படுகிறார்கள் என்றும், மனுதார்கள் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ரத்து செய்யவும் புதிதாக நியமனம் செய்யவும் கோரியுள்ள மனுவில் ஆணையர் கட்சி சேர்க்கப்படவில்லை என்றும், ஆணையருக்கு இந்த மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனைகளைத் தெரிவித்து அவரிடமிருந்து பதில் எதுவும் பெறவில்லை என்றும், ஆட்சேபனை மனுவில் ஆணையரைக் குறைகூறி குற்றச்சாட்டுகள் கூறியுள்ள நிலையில் இம்மனுவில் அவரை கட்சி சேர்க்காமலும் அவரின் ஆட்சேபனையைக் கேட்காமலும் தீர்வு முடிவு எட்ட மனுதாரர் மனு செய்துள்ளது சட்டப்பிழையானது என்றும், வ.வி.எண்.429/2024 ல் பிறந்த உத்தரவு படி மனுதாரே ஆணையரை இந்த எதிர்மனுதாரர்கள் இல்லாமல் தாவாச் சொத்தை சுட்டிக்காட்டி அறிக்கை பெற்றுள்ளார் என்றும், அந்த அறிக்கை சரியானது என ஒப்புக்கொண்டு குறுக்கு விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக ஆணையரைத் தற்போது குறைகூறி மனு செய்துள்ளது விந்தையானது என்றும், ஆணையர் நியமனம் செய்யும் போதே வாதியின் வழக்கை நிரூபணம் செய்வதற்கு நில அளவையர்

தேவை என்பது தெரிந்தே பரிகாரம் கோராமல் தற்போது ஆணையர் அளவையருடன் அளவை செய்யவில்லை, அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனப் புகார் தெரிவிப்பது சட்டவிரோதமானதாகும் என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தங்களின் கட்சியை ஆணங்களின் அடிப்படையிலேயே நிரூபித்துப்போக கடமைப்பட்டவர்கள் என்றும், தங்களின் ஆவணங்களிலேயே நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டபடியான Q வரிசையில் அடையாளப்படுத்தப்பட்ட இடம் மட்டும்தான் மனுதார்களின் பாதை என்பதை ஒப்புக்கொண்டு வா.சா.ஆ.1 2 ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்று விட்டு பிரதிவாதிகளின் இடத்தினை ஆவணமின்றி உரிமைகோருவதற்குத் தகுதியில்லை என்றும், மேலும் வாதிகள் தங்களுடய ஆவணத்திற்கு மாறாக பூமியில் அங்க அடையாளங்களைத் தேடுவதற்கும் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வதற்கும் கோருவதற்கு சட்டப்படி இயலாது என்றும், வாதிகள் தங்களின் வழக்கின் சாட்சியங்களை தங்களின் ஆவணத்திற்கு மாறாகக் கண்டுபிடிப்பதற்கு ஆணையர் நியமனம் செய்ய கோர இயலாது என்றும், மனுதார்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வருவாய் நில அளவையர் சாட்சியம் படியும் பொதுப்பாதை என்பது ஏதும் பூமியில் இல்லை என்பதும் நில அளவை எண்கள் தவறானவை என்பதும் தெளிவுப்படுத்தப்பட்ட நிலையில் அதற்கு மாறாக இந்தநிர் மனு நீதிமன்ற ஆணையரை விசாரிக்க தாக்கல் செய்துள்ளதைத் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

6.4. இருதரப்பு வாதங்கள் மனு மற்றும் எதிருரை சங்கதிகளைப் பரிசீலித்ததில், அசல் வழக்கில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வ.வி.எண்.429/2014 மனு மூலம் நியமிக்கப்பட்டு, இவ்வழக்கில் 26.02.2018 ம் தேதி வரைபடத்துடன் கூடிய அறிக்கையைத் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையரை விசாரணை செய்ய அனுமதி கோரி வ.வி.எண்.12/2026 என்ற மனுவும், மேற்கூறிய வகையில் ஆணையரை விசாரணை செய்யும்

வகைக்கு, அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி இம்மனுவும் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது. இந்நிலையில் அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்தால் தான் வ.வி.எண்.12/2026 மனுவில் மனுதாரர்கள் கோரிய பரிகாரம் குறித்து இறுதியாக தீர்மானிக்க முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.5. எனினும், இம்மனுவை அனுமதித்து அசல் வழக்கை மறுதிறவு செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் அலைச்சல் மற்றும் கஷ்ட நஷ்டத்தைக் கருத்தில் கொண்டு, மனுதாரர்களின் இம்மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகள் இந்த 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு செலவு தொகையாக ரூ.500/—ஐ வரும் 08.06.2026 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும், தவறும்பட்சத்தில், இம்மனு தானாக தள்ளுபடி ஆனதாகக் கருதப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுவை மீண்டும் அழைக்க 09.06.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.06.02 17:50:16 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-** **–** இல்லை

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.06.02 17:50:27 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

கூ.மா.உ. நீதிமன்றம்,

சங்கரன்கோவில்,

I.A.No.11/2026 in

O.S.No.87/2014

உத்தரவு (Draft / Fair)

நாள் : 02.06.2026